# அதிநவீன கழிவறைகள், ஆனால் சுத்தம் போதாது: லிம் சுவீ சே

அதிநவீன கழிவு அகற்றும் அமைப்பு முறையை சிங்கப்பூர் பெற்றிருக்கலாம்.

எனினும் சிங்கப்பூரின் பொதுக் கழிவறைகள் போதிய அளவு சுத்தமாக இல்லை என்று பிரதமர் அலுவலக அமைச்சர் லிம் சுவீ சே கூறியுள்ளார்.

உலகிலேயே சுத்தமான கழிவறைகளைக் கொண்ட நாடாக சிங்கப்பூரை உருவாக்க, சிங்கப்பூரர்கள் அனைவரையும் ஒன்று சேர்ந்து செயல்படுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

உலக கழிவறை உச்சநிலை மாநாட்டை நேற்று எக்ஸ்போவில் திறந்து வைத்து அவர் பேசினார்.

அடிப்படை கழிவறை வசதிகளை ஏற்படுத்துவது மிகப்பெரிய வர்த்தகம்.

கிட்டத்தட்ட யுஎஸ் 1 டிரில்லியன் டாலர் வரை செலவாகிறது என மாநாட்டில் பங்கேற்றவர்கள் குறிப்பிட்டனர்.

எனினும் நவீன கழிவறை வசதிகள் இன்றி வாழும் கிட்டத்தட்ட 2.5 பில்லியன் மக்களுக்கு இவ்வசதியை ஏற்படுத்தித் தர அதிகம் செய்யப்பட வேண்டியுள்து என்ற இத்துறையைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்டனர்.

ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் இம்மாநாடு, இரண்டாவது முறையாக தற்போது சிங்கப்பூரில் நடைபெறுகிறது.

உலக சமூகம் ஒவ்வொரு டாலரையும் ஒவ்வொரு சிந்தனையையும் ஒவ்வொரு துளி தண்ணீரையும் நல்ல முறையில் பயன்படுத்தினால்தான் உலக கழிவறை பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றார் திரு லிம் சுவீ சே.

"சிங்கப்பூரில் தண்ணீர் நிர்வாகமும் கழிவறை மேம்பாடும் அக்கறையுடன் உருவாக்கப்பட்டுள்ளன.

"100 விழுக்காடு வீடுகளிலும் பொது இடங்களிலும் உலகின் அதிநவீன கழிவறை வசதிகளைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக சிங்கப்பூர் உள்ளது," என்றார் அமைச்சர் லிம்.

எனினும் சிங்கப்பூர் மாறுபட்ட சவாலை எதிர்நோக்குவதாக உலக கழிவறை அமைப்பின் நிறுவனர் திரு ஜாக் சிம் சேனல் நியூஸ் ஏசியாவுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

"ஃபோர்முலா ஒன் பந்தயத்தை சிங்கப்பூரால் நடத்த முடிகிறது. ஏன் காப்பிக் கடை கழிவறைகளைச் சுத்தமாக வைத்திருக்க முடிய வில்லை," என்று மக்கள் தம்மிடம் கேட்பதாக அவர் குறிப்பிட்டார்.

"சட்டத்தை அமல்படுத்துவதிலும் அதை ஊக்குவிப்பதிலும் இலக்கு இருந்தால், சாதிக்க முடியும். இது பெரி ராக்கெட் அறிவியல் அல்ல.

"கழிவறைக்குச் செல்வது இன்பமான அனுபவமாக வேண்டும். கழிவறை மக்களை மதித்தால், மக்கள் கழிவறையை மதிப்பார்கள்," என்றார் அவர்.

உலக கழிவறை உச்சநிலை மாநாடு, சுத்தமான சுற்றுச் சூழல், மற்றும் நகரைச் சுத்தமாக வைத்திருப்பது பற்றியும் ஆராய்கிறது.